## சீன அதிபர் வருகையால் கூட்டம்

# மெட்ரோ ரெயிலில் ஒரே நாளில் 1 லட்சத்து 37 ஆயிரம் பேர் பயணம்

சென்னை, அக். 13–

பிரதமர் மோடி, சீன அதிபர் ஜீ ஜின்பிங் சந்திப்பின் போது சென்னையில் பல்வேறு இடங்களில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

### போக்குவரத்து மாற்றம்

அப்போது சென்னை முதல் மாமல்லபுரம் வரை போலீசார் உச்சகட்ட பாதுகாப்பை மேற்கொண்டனர். அந்த சமயத்தில் பல இடங்களில் வாகனங்களை மாற்றுப் பாதையில் திருப்பி விட்டனர். இதனால் பொதுமக்களும், வாகனங்களில் செல்பவர்களும் கடும் அவதி அடைந்தனர்.

கிண்டி, தரமணி, திருவான்மியூர், பகுதியில் மின்சார ரெயில்கள் சிறிது நேரம் நிறுத்தி இயக்கப்பட்டன. கோவளம், கிண்டி, பல்லாவரம், சோழிங்கநல்லூர், துரைப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பஸ்கள் நிறுத்தப்பட்டன. ஆனால் மெட்ரோ ரெயில் சேவையில் எந்தவித தடையும் ஏற்படவில்லை. வழக்கமான இடைவெளியில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டது. ஜி.எஸ்.டி. அண்ணாசாலை வழியாக செல்ல திட்டமிட்டிருந்த மக்கள் மெட்ரோ ரெயில்களை பயன்படுத்தினர்.

இதனால் மெட்ரோ ரெயில்களில் கூட்டம் அதிகமானது. சென்ட்ரல், கோயம்பேடு, கிண்டி, ஆலந்தூர் நிலையங்களில் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

### 1.37 லட்சம் பேர்

நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 1 லட்சத்து 37 ஆயிரத்து 820 பேர் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்துள்ளனர்.

அக்டோபர் மாதத்தில் இதுவரை அதிகபட்ச பயணிகள் பயணம் செய்த நாள் இதுதான் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.